உங்கள் அபிமான தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில் பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்! கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள் வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

• பதிப்பு : நாகர்கோவில் • 17.07.2026 • மலர் 04 • இதழ்: 198 • வெள்ளிக்கிழமை • Edition : Nagercoil • 17.07.2026 • Vol : 04 • Issue : 198 • Page : 4 • Rs. 5/-

# வளமான தமிழகத்தை உருவாக்க உறுதியேற்போம்

## அதிகாரிகளுக்கு முதல் அமைச்சர் விஜய் அறிவுறுத்தல்



சென்னை, ஜூலை 17

தமிழக முதல்அமைச்சர் விஜய், பல்வேறு அரசு துறைகளின் செயல்பாடுகளை தொடர்ந்து ஆய்வு செய்து வருகிறார். இதற்காக நடைபெறும் ஆய்வுக் கூட்டங்களில் சம்பந்தப்பட்ட அமைச்சர்கள் மற்றும் உயரதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தி, துறைகளின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான பல்வேறு அறிவுறுத்தல்களை வழங்கி வருவதாக கூறப்படுகிறது. அந்த வகையில், அண்மையில் நடைபெற்ற போக்குவரத்துத் துறை ஆய்வுக் கூட்டத்தில், மாநிலம் முழுவதும் சேவையில் ஈடுபடுத்துவதற்காக 2,000 புதிய குளிர்சாதன வசதி கொண்ட பேருந்துகளை உடனடியாக கொள்முதல் செய்யுமாறு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அறிவுறுத்தியதாக தகவல் வெளியாகியுள்ளது. மேலும்,புதியகுளிர்சாதன பேருந்துகள் அறிமுகப்படுத்தப்பட்டாலும், அதனை காரணமாகக் கொண்டு பயணிகளின் பேருந்து கட்டணத்தை எந்த சூழலிலும் உயர்த்தக் கூடாது என்றும் அவர் வலியுறுத்தியுள்ளதாக கூறப்படுகிறது. அதேநேரத்தில், கட்டண உயர்வைத் தவிர்த்து மாற்று வழிகளில் போக்குவரத்துத்துறையின் வருவாயை அதிகரிக்கும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டதாகதகவல்கள் தெரிவிக்கின்றன. பொதுமக்களுக்கு தரமான, வசதியான மற்றும் நவீன போக்குவரத்து சேவையை வழங்குவதுடன், புதிய குளிர்சாதன பேருந்துகளை அறிமுகப்படுத்தி, பயணிகளுக்கு கூடுதல் நிதிச்சுமை ஏற்படாத வகையில் மாற்று வருவாய் ஆதாரங்களை உருவாக்க வேண்டும் என்பதே முதலமைச்சரின் நோக்கம் என கூறப்படுகிறது. இதற்காக பேருந்துகளின் வெளிப்புறம் மற்றும் உட்புறத்தில் விளம்பரங்கள் அமைத்தல், பயணச்சீட்டுகளின் (டிக்கெட்) பின்புறத்தில் விளம்பரங்களை அச்சிடுதல் உள்ளிட்ட பல்வேறு வழிகளின் மூலம் கூடுதல் வருவாய் ஈட்டுவதற்கான திட்டங்களை போக்குவரத்துத் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து வருவதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

## அரசு பஸ்சில் பயணம் பொது மக்களிடம் குறை கேட்டு ஆய்வுசெய்த ஈரோடு ஆட்சியர்




ஈரோடு ஜூலை 17

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர்கந்தசாமி "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற திட்டத்தின் கீழ், ஈரோடு மாவட்டம் தாளவாடி வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சித்திட்டப்பணிகளைநேரில்சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

ஆசனூர், தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்க நியாயவிலைக்கடையில் அத்தியாவசிய பொருட்களின் இருப்பு விபரம். குடும்ப அட்டைதாரர்கள் எண்ணிக்கை. பயோமெட்ரிக் முறை குறித்து பணியாளரிடம் கேட்டறிந்தார். தாளவாடி, வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை சார்பில் செயல்பட்டு வரும் துணை வேளாண்மை விரிவாக்க மையத்தில் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டு வரும் விதைகள், உரங்கள், உயிர் உரங்கள், மற்றும் வேளாண் இடுபொருட்களின் இருப்பு. விநியோக நிலை, பதிவேடுகள் பராமரிப்பு உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆசனூர் கிராம நிர்வாக அலுவலத்தில் பராமரிக்கப்பட்டு வரும் பதிவேடுகளை பார்வையிட்டார். சென்டர் தொட்டி பகுதியில் புதிய நீர்த்தேக்க குட்டை அமைக்கப்படவுள்ள இடத்தையும், பார்வையிட்டு, தேர்வு செய்யப்பட்டுள்ள இடத்தின் நில அமைப்பு. மழைநீர் சேகரிப்பு வாய்ப்பு, சுற்றுப்புற பகுதிகளுக்குக் கிடைக்கும் பயன்கள் மற்றும் திட்டத்தை விரைவாக செயல்படுத்துவதற்கான முன்னேற்பாடுகள் குறித்து தொடர்புடைய அலுவலர்களிடம் கேட்டறிந்தார்.

ஈரோடு தாளவாடி ஊராட்சி ஒன்றியம். ஆசனூர் ஊராட்சி. பங்களா தொட்டியில் அமைந்துள்ள சத்துணவு கூடம் சமையலறை கட்டிடத்தை பார்வையிட்டு, மாணவர்களுக்குசுகாதாரமானமற்றும் தரமான உணவு தயாரிக்கப்படுவதையும், சமையலறையின் தூய்மை, குடிநீர் வசதி, உணவுப் பொருட்களின் இருப்பு மற்றும் பராமரிப்பு உள்ளிட்டவற்றை பார்வையிட்டு ஆய்வு செய்தார். ஆசனூர் பகுதியில் செயல்பட்டு வரும் ஈசேவை மையத்தை பார்வையிட்டு பொதுமக்களுக்கு வழங்கப்பட்டு வரும் ஆதார் பதிவு மற்றும் திருத்தப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். ஆசனூர் அரசு பழங்குடியினர் உண்டு உறைவிட மேல்நிலைப்பள்ளியில் விடுதியில்தங்கிபயிலும்மாணவ. மாணவியர்களுக்கு வழங்கப்படும் உணவு, உணவுப்பொருள்களின் தரம், மின்விளக்கு, சுகாதாரம், சமையலறை பராமரிப்பு, படிப்பறைகள். கண்காணிப்பு கேமரா, விளையாட்டு உபகரணங்கள். முதலுதவி பெட்டி, புகார் பெட்டி, குடிநீர் வசதி, கழிப்பறை வசதிகள் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

## கணியூரில் த.வெ.க.வினர் இடையே தள்ளுமுள்ளு

### வீடியோ வைரலான நிலையில் சூலூர் எம்.எல்.ஏ. விளக்கம்



கோவை ஜூலை:17

கோவை மாவட்டம் கணியூரில் தமிழக வெற்றி கழகத்தினர் இடையே ஏற்பட்ட தள்ளுமுள்ளு குறித்து சூலூர் சட்டமன்ற தொகுதி எம்.எல்.ஏ. சுகுமார் விளக்கம் அளித்துள்ளார்.

நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் சூலூர் தொகுதியில் வெற்றி பெற்ற தமிழக வெற்றி கழகத்தின் எம்.எல்.ஏ. சுகுமார், தொகுதி மக்களுக்கு நன்றி தெரிவிக்கும் பயணத்தை மேற்கொண்டு வருகிறார். நேற்றிரவு அவர் கணியூர் பகுதிக்குச் சென்றபோது, கட்சியினர் இடையே கூட்ட நெரிசலில் திடீரென தள்ளுமுள்ளு ஏற்பட்ட நிலையில் பெண் ஒருவர் தாக்கப்பட்டதாக தெரிகிறது. இதன் வீடியோ சமூக வலைதளங்களில் வைரலான நிலையில், இந்தச் சம்பவத்தில் பாதிக்கப்பட்ட பெண் ஒருவர் கோவை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் குறித்து சூலூர் தொகுதி எம்.எல்.ஏ. சுகுமார் செய்தியாளர்களிடம் விளக்கம் அளித்தார். அப்போது அவர் கூறுகையில், தமிழக முதல்வர் விஜய் தலைமையிலான நமது கட்சியின் சார்பில் இந்தத் தொகுதியில் வேட்பாளராக நின்று வெற்றி பெற்றதற்காக, ஒவ்வொரு கிராமமாகச் சென்று பொதுமக்களுக்கு நன்றி தெரிவித்து வருகிறேன். அதன்படி நேற்றிரவு கணியூர் கிராமத்திற்குச் சென்றபோது அங்கு கூட்டம் அதிகமாக இருந்தது. எனக்கு மாலை அணிவிக்கும் போது கூட்ட நெரிசலில் லேசான தள்ளுமுள்ளு ஏற்பட்டதாகக் கூறினர். ஆனால்,நான் அந்த இடத்தைக் கடந்து சுமார் நான்கு அல்லது ஐந்து கிலோமீட்டர் தூரம் சென்ற பிறகுதான் இப்படி ஒரு சம்பவம் நடந்ததாக எனக்குத் தகவல் தெரிவித்தனர். உடனடியாக நான் திரும்பி வருவதாகக் கூறினேன். ஆனால், பிரச்சினை முடிந்துவிட்டது என்று அவர்கள் கூறியதால் நான் பயணத்தைத் தொடர்ந்தேன். பின்னர் நள்ளிரவு 12 மணிக்கு மேல் அந்தப் பெண் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். கூட்ட நெரிசலில் எதிர்பாராமல் தள்ளப்பட்டதால் ஏற்பட்ட வலியின் காரணமாக அவர் மருத்துவமனைக்குச் சென்றிருக்கலாம். அங்கு அவருக்கு ஸ்கேன் உள்ளிட்ட பரிசோதனைகள் செய்யப்பட்டன.

பரிசோதனை முடிவுகளில் எந்த பாதிப்பும் இல்லை எனத் தெரியவந்ததையடுத்து அவர் உடனடியாக டிஸ்சார்ஜ் செய்யப்பட்டுவிட்டார்.தற்போது அந்தப் பெண்ணிடம் பேசி விசாரித்தோம். அவருக்குத் தொண்டை வலி இருப்பதாகவும், இரண்டு நாட்கள் கழித்து நேரில் வந்து சந்திப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார். தேர்தலுக்கு முன்பு கூட்டத்தோடு கூட்டமாக அவர் வருவார். மற்றபடி அவர் என்னை நேரில் சந்தித்துப் பேசியதில்லை. இருப்பினும் அவருக்கு ஏதாவது உதவி தேவைப்பட்டால் செய்து தருவதாகக்கூறியுள்ளேன். இந்தச்சம்பவத்தை வைத்து, கட்சியில் ஏதோ கோஷ்டிப் பூசல் இருப்பது போன்ற மாயையை உருவாக்கவும், தேவையற்ற பிரச்சினையை ஏற்படுத்தவும் சிலர் முயற்சிக்கின்றனர். கட்சியில் எந்தவிதமான பிரச்சினையும் இல்லை,எல்லாம் வழக்கம் போல் சீராகச் சென்று கொண்டிருக்கிறது என்று அவர் தெரிவித்தார்.



### அகஸ்தீஸ்வரம் வட்டார பகுதிகளில்

## உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் கலெக்டர் ஆய்வு

நாகர்கோவில், ஜூலை, 17

அகஸ்தீஸ்வரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் உங்களைத் தேடி உங்கள் ஊரில் திட்டத்தின்கீழ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். பின்னர் அவர் தெரிவிக்கையில்:

தமிழகஅரசின்அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும் தங்குதடையின்றி விரைவாக மக்களைச்சென்றடையும் வகையில் 'உங்களைத் தேடி உங்கள் ஊரில்' திட்டம் செயல்படுகிறது. இந்த திட்டத்தின்கீழ் கன்னியாகுமரி பழத்தோட்ட வளாகத்தில் அமைந்துள்ள சூழலியல் பூங்கா ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. சுற்றுலா பயணிகளை கவரும் வகையில் பூங்காவினை மேம்படுத்திட தோட்டக்கலைத் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

தொடர்ந்து வட்டகோட்டை சுற்றுலா தலத்தினை பார்வையிடப்பட்டதோடு வட்டக்கோட்டையின் அருகில் உள்ள ஒத்தப்பனை குளம் பார்வையிடப்பட்டது. அங்கு படர்ந்துள்ள பாசி உள்ளிட்ட கழிவுகளைஅகற்றி குளத்திலிருந்து செல்லும் உபரி நீரினை விவசாயிகள் மற்றும் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு கொண்டுவர நீர்வளத்துறை பொறியாளர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.

பின்னர் கொட்டாரம் அரசு மேல்நிலைப்பள்ளி ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, ஆசிரியர்கள் பாடம் கற்பிக்கும் முறை மற்றும் அனைத்து பாட புத்த கங்களும் கிடைக்கப்பெற்றதா என மாணவ மாணவியர்களிடம் கேட்டறியப்பட்டது. நல்லூர் கால்நடை மருந்தக வளாகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டத்தின்கீழ் ரூ.17.10 இலட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டு வரும் அங்கன்வாடி மைய கட்டிடம் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும் சுசீந்திரம் வழியாக செல்லும் பழையாற்றினை ஆய்வுமேற்கொண்டு, தூர்வார துறைசார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற ஆய்வில் அகஸ்தீஸ்வரம் வட்டாட்சியர் ஆறுமுகம், தோட்டகலைத்துறை உதவி அலுவலர், அகஸ்தீஸ்வரம் வட்டார வளர்ச்சி அலுவலர்கனகபாய், துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டார்கள்.

### யுவராஜா பவுண்டேசன் சார்பில்

## பள்ளி தேர்வில் அதிக மதிப்பெண் பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ்



ஈரோடு, ஜூலை 17

மறைந்த முதல் அமைச்சர் காமராஜரின் பிறந்த நாளை முன்னிட்டு யுவராஜா பவுண்டேசன் சார்பில் அரசு பள்ளிகளில் பிளஸ் 2, 10ம் வகுப்பு பொதுத் தேர்வில் அரசு பள்ளியில் முதல் இரண்டு இடங்களை பிடித்த 60 மாணவ மாணவிகளுக்கு சான்றிதழ் விருது மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்க ப்பட்டது.

நிகழ்ச்சிக்கு யுவராஜா அறக்கட்டளையின் நிறுவனத் தலைவர் யுவராஜா தலைமை தாங்கினார்.

வேளாளர் கல்வி நிறுவனங்களின் செயலர் மற்றும் தாளாளர் சந்திரசேகர் முன்னிலை வகித்தார். முன்னாள் அரிமா சங்க தலைவர் யுவராஜா மற்றும் சங்கமேஸ்வரர் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதன் பிறகு பவுண்டேசன் தலைவர் யுவராஜா கூறியதாவது த மா கா வில் மாநில பொதுச் செயலாளராக இருந்த நான் அக்கட்சியில் இருந்து விலகி உள்ளேன். இப்போது எந்த கட்சியிலும் சேரும் எண்ணம் இல்லை. இருப்பினும் அரசியலில் இருந்து ஓய்வு பெறவில்லை. சிறிது காலத்திற்குப் பிறகு மக்களுக்கு நல்லது செய்யும் அரசியல் கட்சியில் சேருவது பற்றி முடிவு செய்யப்படும். முதல் அமைச்சர் விஜய் தலைமையில் லஞ்சம் லாவண்யமற்ற சிறப்பான ஆட்சி நடக்கிறது.

இவ்வாறு அவர் கூறினார்.

## காட்பாடியில் தடை செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகளை கொரியரில் வாங்கிய முன்னாள் பல்கலைக்கழக மாணவர் கைது




வேலூர் ஜூன்17

வேலூர் மாவட்டம் காட்பாடியில் உள்ள பிரபல தனியார் பல்கலைக்கழகத்தின் முன்னாள் மாணவர் ஒருவர், தமிழக அரசால் தடை செய்யப்பட்ட வலி நிவாரணி மாத்திரைகளை கொரியர் மூலம் பெற்றுக்கொண்டபோது போலீசாரால் கையும் களவுமாக கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்ட வாலிபர் ஜம்மு காஷ்மீரை சேர்ந்த பவன் தூபே (23) என அடையாளம் காணப்பட்டுள்ளார். இவர் காட்பாடியில் உள்ள தனியார் பல்கலைக்கழகத்தில் கடந்த 2024ஆம் ஆண்டு பி.டெக் (தகவல் தொழில்நுட்பம் IT) படித்து முடித்துள்ளார். இவருக்கு சில பாடங்களில் அரியர்ஸ் இருந்ததால் அவற்றை எழுதி தேர்ச்சி பெறுவதற்காக கடந்த மாதம் காட்பாடிக்கு வந்துள்ளார். இதற்காக கடந்த ஜூன் மாதம் முதல் காட்பாடியில் உள்ள ஒரு தனியார் விடுதியில் தனது நண்பருடன் அறை எடுத்து தங்கி, தேர்வு எழுதி வந்துள்ளார். இந்நிலையில், பவன் தூபேயுடன் தங்கியிருந்த அவரது நண்பர் அண்மையில் டெல்லிக்குச் சென்றுள்ளார். அங்கிருந்து தமிழக அரசால் தடை செய்யப்பட்ட 100 வலி நிவாரணி மாத்திரைகளை பார்சல் மூலம் காட்பாடியில் உள்ள டி.டி.சி (DTC) கொரியர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளார். இந்த மாத்திரைகளின் மொத்த மதிப்பு ₹427 எனத் தெரிய வந்துள்ளது. பல்கலைக்கழகத்தின் அருகே உள்ள கொரியர் சேவை அலுவலகத்திற்கு அந்த பார்சலை வாங்குவதற்காக பவன் தூபே சென்றுள்ளார். அப்போது ரகசிய தகவலின் பேரில் அங்கு கண்காணிப்பில் ஈடுபட்டிருந்த போலீசார் தடை செய்யப்பட்ட மாத்திரைகளை வாங்கிய பவன் தூபேயை கையும் களவுமாக பிடித்து கைது செய்தனர். அவரிடமிருந்த 100 மாத்திரைகளும் பறிமுதல் செய்யப்பட்டன.

கைது செய்யப்பட்ட பவன்தூபே ஒரு முன்னாள் மாணவர் என்பதாலும் அவரது எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டும்பிரம்மபுரம் போலீசார் அவரை காவல் நிலைய நிபந்தனை ஜாமீனில் விடுவித்தனர். மேலும், இந்த வழக்கு தொடர்பாக நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அவருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது. டெல்லியில் இருந்து மாத்திரைகளை அனுப்பிய அவரது நண்பர் குறித்தும் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

தினதமிழ்
17.07.2026

### காமராஜர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு

# மாவட்ட அளவிலான கபடி போட்டி வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்கல்



தூத்துக்குடி, ஜூலை 17

காமராஜர் பிறந்தநாள் விழாவை முன்னிட்டு மாவட்ட அளவிலான கபடி போட்டி வெற்றி பெற்ற அணிகளுக்கு ரொக்கப் பரிசு வழங்கல்: பெருந்தலைவர் காமராஜரின் 124வது பிறந்தநாளை முன்னிட்டு, காமராஜர் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கம் சார்பில் தூத்துக்குடி மாவட்ட அளவிலான பள்ளிகளுக்கான கபடி போட்டி ஜூலை 14 மற்றும் 15 ஆகிய தேதிகளில் காமராஜர் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

போட்டியின் தொடக்க விழாவில் தி அரவிந்த் ஆட்டோ ஏஜென்சி (ஹீரோமோட்டோகார்ப்) நிறுவனத்தின் ராஜ்குமார், அன்னை ஜுவல்லர்ஸ் நிர்வாக இயக்குநர்பழரசம் பி. விநாயகமூர்த்தி, தூத்துக்குடி கல்விக்கழக செயலாளர் பி.எஸ்.பி.கே.ஜே. சோமு மற்றும் காமராஜர் கல்லூரி முதல்வர் டாக்டர் கே. பானுமதி ஆகியோர் கலந்து கொண்டு போட்டியைத் தொடங்கி வைத்தனர். ஆண்கள் பிரிவில் நடைபெற்ற இறுதிப்போட்டியில்தூத்துக்குடிசெயிண்ட் மேரீஸ் ஆண்கள் மேல்நிலைப்பள்ளி அணி முதலிடம் பெற்று ரூ.10 ஆயிரம் ரொக்கப் பரிசை வென்றது. இரண்டாம்இடத்தை தூத்துக்குடி பாரதியார் வித்யாலயம் மேல்நிலைப்பள்ளிரூ.7 ஆயிரம், மூன்றாம் இடத்தை அரசு மேல்நிலைப்பள்ளி, சிவகளாபுரம் ரூ.5 ஆயிரம், நான்காம் இடத்தை காமராஜர்மேல்நிலைப்பள்ளி, நாலுமாவடி ரூ.3 ஆயிரம் பெற்றன. பெண்கள் பிரிவில் தூத்துக்குடி தஸ் நெவிஸ் மாதா மகளிர் மேல்நிலைப்பள்ளி அணி முதலிடம் பெற்று ரூ.10 ஆயிரம் ரொக்கப் பரிசை வென்றது. அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, காயல்பட்டினம் ரூ.7 ஆயிரம் இரண்டாம் இடத்தையும், அரசு மகளிர் மேல்நிலைப்பள்ளி, கோவில்பட்டி ரூ.5 ஆயிரம்,மூன்றாம் இடத்தையும், தூத்துக்குடி விக்டோரியா மகளிர் மேல்நிலைப்பள்ளி ரூ.3 ஆயிரம் நான்காம் இடத்தையும் பெற்றது. நிறைவு விழாவில் தமிழ்நாடு மெர்கண்டைல் வங்கியின் இயக்குநர் எஸ்.ஆர். அரவிந்த்குமார் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு கோப்பைகள், சான்றிதழ்கள் மற்றும் ரொக்கப் பரிசுகளை வழங்கி பாராட்டினார். போட்டிக்கான விளையாட்டு ஏற்பாடுகளை காமராஜர் கல்லூரி உடற்கல்வித் துறைத் தலைவர் முனைவர் ஆனந்தராஜ் தலைமையில் பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் சிறப்பாக மேற்கொண்டனர். ஒட்டுமொத்த போட்டி ஏற்பாடுகளை காமராஜர் கல்லூரி முன்னாள் மாணவர் சங்கத் தலைவர் ராஜேஷ் தில்லை தலைமையில், துணைத் தலைவர்கள் டி. வன்னியராஜ், எஸ். சரவணக்குமார், செயலாளர் வி. விக்னேஷ், துணைச் செயலாளர்கள் என். கார்த்திக் செல்வன், ஏ. சக்திவேல், பொருளாளர் முனைவர் ஏ. கலையரசி மற்றும் பேராசிரியர்கள் முனைவர் பால்ராஜ், மதனகோபால் ஆகியோர் ஒருங்கிணைத்து சிறப்பாக நடத்தினர்.




### ஈரோட்டில்

# பொதுமக்களுக்கு சாலை பாதுகாப்பு விழிப்புணர்வு

## போக்குவரத்து விதிகளை கட்டாயம் பின்பற்றுமாறு காவல்துறை அறிவுரை

ஈரோடு, ஜூலை 17

ஈரோடுமத்தியபேருந்து நிலையம் அருகிலுள்ள ஸ்வஸ்திக் ரவுண்டானா பகுதியில், பொதுமக்களிடையேசாலைபாதுகாப்பு குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் வடக்கு போக்குவரத்து காவல்துறையினர் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர்.

ஈரோடுமாவட்டகாவல் கண்காணிப்பாளர் டி.வி. கிரண் ஸ்ருதி அவர்களின் உத்தரவின்பேரில், போக்குவரத்து காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன் தலைமையிலும், உதவி ஆய்வாளர் சண்முகமூர்த்தி முன்னிலையிலும் நடைபெற்றநிகழ்ச்சியில், இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பின்னால் அமர்ந்து பயணிப்பவர்கள் கட்டாயம் ஹெல்மெட் அணிய வேண்டும், போக்குவரத்து சிக்னல்களை மதிக்க வேண்டும், செல்பேசி பயன்படுத்தியபடி வாகனம் ஓட்டக் கூடாது, செல்லுபடியாகும் ஓட்டுநர் உரிமம் மற்றும் வாகன ஆவணங்களை எப்போதும் வைத்திருக்க வேண்டும் என்பன உள்ளிட்ட சாலை பாதுகாப்பு விதிகள் குறித்து பொதுமக்களுக்கு எடுத்துரைக்கப்பட்டது.

மேலும், அதிக வேகம், கவனக்குறைவு மற்றும் போக்குவரத்து விதிமீறல்கள் உயிரிழப்பை ஏற்படுத்தும் என்பதால், ஒவ்வொருவரும் பொறுப்புடன் வாகனம் இயக்கி, சாலை பாதுகாப்பு விதிகளைமுழுமையாககடைபிடிக்க வேண்டும் என காவல்துறையினர் அறிவுறுத்தினர். பொதுமக்களின் உயிர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், இதுபோன்ற சாலை பாதுகாப்புவிழிப்புணர்வு நிகழ்ச்சிகள்மற்றும்போக்குவரத்து கண்காணிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் என்றும் வடக்கு போக்குவரத்து காவல்துறையினர் தெரிவித்தனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்திலிருந்து வலது மற்றும் இடதுபுற பிரதான கால்வாய்களில் 9,012 ஏக்கர் நிலங்கள் பயன்பெறும் வகையில் 120 நாட்களுக்கு முதல் போக விவசாய பாசனத்திற்காக தண்ணீரை மாவட்ட ஆட்சித்தலைவர்.ச.தினேஷ்குமார்சட்டமன்றஉறுப்பினர்கள்.பா.முகுந்தன்(கிருஷ்ணகிரி), .இ.சி.கோவிந்தராசன் (பர்கூர்) ஆகியோர் திறந்து வைத்தனர். உடன், நீர்வளத்துறை உதவி செயற்பொறியாளர் சபரிநாதன், இணை இயக்குநர் (வேளாண்மை) (பொ) உமா, உதவி பொறியாளர்கள் .வெங்கடேஷ், .பொன்னிவளவன் உள்ளிட்ட பலர் உள்ளனர்.

# ஈரோடு – பவானி சாலையில் மைய தடுப்புச் சுவர் அமைக்கும் பணி தீவிரம்



ஈரோடு, ஜூலை 17

ஈரோடு மாவட்டம் அசோகபுரம் – பவானி செல்லும் முக்கிய சாலையில் போக்குவரத்து பாதுகாப்பை மேம்படுத்தும் நோக்கில் மையத் தடுப்புச் சுவர் (Concrete Median Barrier) அமைக்கும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

கனரக வாகனங்கள் மற்றும் கிரேன் உதவியுடன் கான்கிரீட் தடுப்புகள் சாலையின் நடுப்பகுதியில் பொருத்தப்பட்டு வருகின்றன.

இந்தப் பணியால் எதிரெதிர் திசையில் வரும் வாகனங்கள் தவறுதலாக மோதும் அபாயம் குறைவதுடன், போக்குவரத்து ஒழுங்கும் மேம்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பணிகள் நடைபெறும் பகுதிகளில் வாகன ஓட்டிகள் வேகத்தை கட்டுப்படுத்தி, போக்குவரத்து விதிகளை கடைப்பிடித்து,. பணியாளர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு கவனமாக செல்லுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்தப் பணிகள் நிறைவடைந்த பிறகு, அசோகபுரம் – பவானி சாலையில் விபத்துகள் குறைவதோடு, பொதுமக்கள் பாதுகாப்பாகவும் சீரான போக்குவரத்து வசதியுடனும் பயணிக்க முடியும் என்ற எதிர்பார்ப்பு நிலவுகிறது.



ஈரோடு மாவட்டம், தாளவாடி, அரேப்பாளையம் கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்க தொகுப்பு பால் குளிரகத்தின் செயல்பாடுகளை மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.



### தென்தாமரைக்குளம் எல் எம் எஸ் பள்ளியில்

# காமராஜர் பிறந்த தின கல்வி வளர்ச்சிநாள் கொண்டாட்டம்

தென்தாமரைகுளம் ஜூலை.17

தென்தாமரைகுளம் எல்.எம்.எஸ் மேல்நிலைப் பள்ளியில் காமராஜரின் 124 வது பிறந்த தின விழா கல்வி வளர்ச்சி நாளாக விமர்சையாக கொண்டாடப்பட்டது. நிகழ்ச்சிக்கு பள்ளி தாளாளர் கால்வின் தலைமை வகித்து தலைமையுரையாற்றினார். பள்ளி தலைமை ஆசிரியை அனு ஜே ப்ரீத்தா முன்னிலை வகித்து சிறப்புரையாற்றினார். ஆசிரியை ஆன்லின் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சியில் மாணவ மாணவிகளின் பேச்சு, பாடல், நடனம் உள்ளிட்ட கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. காமராஜரின் பிறந்த தினத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முன்னதாக ஆசிரியை ஜான்சி ரீட்டா அனைவரையும் வரவேற்றார். ஆசிரிய செயலாளர் சாந்தி மார்கிரட் நன்றி கூறினார். நிறைவில் மாணவ மாணவிகளுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டன.

### காஞ்சி காமகோடி சைல்ட் டிரஸ்ட் மருத்துவமனை

# குழந்தைகளுக்கான பல்துறை சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் கிளினிக் தொடக்கம்.

சென்னை, ஜூலை 17,

காஞ்சி காமகோடி சைல்ட் டிரஸ்ட் மருத்துவமனை குழந்தைகளுக்கான சுவாச நோய் சிகிச்சை சேவைகளை மேலும் வலுப்படுத்தும் வகையில், சிறப்பு பல்துறை சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் கிளினிக் மற்றும் குழந்தைகளுக்கான மேம்பட்ட நுரையீரல் சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் மூலம், சிக்கலான சுவாச நோய்களால்பாதிக்கப்பட்டகுழந்தைகளுக்கு,நோயறிதல், சிகிச்சை மற்றும் நீண்டகால முழுமையான சேவைகள் ஒரே இடத்தில் வழங்கப்படுகின்றன.

மருத்துவ இயக்குநர் டாக்டர் ஜனனி சங்கர் கூறுகையில், "

சிஸ்டிக் ஃபைப்ரோசிஸ் என்பது வாழ்நாள் முழுவதும் தொடர்ச்சியான கண்காணிப்பும், பல்வேறு துறை நிபுணர்களின்ஒருங்கிணைந்தசிகிச்சையும்தேவைப்படும் நோயாகும். துரதிர்ஷ்டவசமாக, இந்தியாவில் தாமதமான நோயறிதல் இன்னும் பொதுவாக உள்ளது. பல குழந்தைகள், நுரையீரலில் நிரந்தர பாதிப்பு ஏற்பட்ட பிறகே எங்களிடம் வருகின்றனர். ஆரம்ப நிலையிலேயே நோயைக்கண்டறிந்து,முழுமையானசிகிச்சைஅளித்தால், நோயின் போக்கை குறிப்பிடத்தக்க வகையில் மாற்றி, குழந்தைகளின்வாழ்க்கைத்தரத்தை பெரிதும் மேம்படுத்த முடியும். எங்களது சிஸ்டிக் ஃபைப்ரோசிஸால் (சி. எஃப்)கிளினிக் தமிழ்நாட்டில் இரண்டாவது மையமாகும். முதலாவது CMC வேலூர் சி .எம்.சியில் செயல்படுகிறது என்றார்.



மறைந்த முதலமைச்சர் காமராஜர் வது பிறந்தநாளை ஒட்டி ஈரோடு அரசு ஆஸ்பத்திரி அருகே உள்ள காமராஜர் சிலைக்கு தமிழக செங்கொடி உழைப்பாளர்கள் சங்கத்தின் சார்பாக .மனோகரன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இதில் திருமுருகன் சுரேஷ் நகுலேஸ்வரன் பழனிச்சாமி பழனியப்பன் நல்லதம்பி உள்பட பலர் கலந்து கொண்டனர்.




# நாகர்கோவில் அரசு ஆயுர்வேத மருத்துவக்கல்லூரி மாணவர் பேரவை விழா

## மாவட்ட ஆட்சித்தலைவர் பங்கேற்பு

நாகர்கோவில், ஜூலை. 17

கன்னியாகுமரி மாவட்டம் கோட்டார் அரசு ஆயுர்வேத மருத்துவ கல்லூரி மருத்துவமனை நாகர்கோவில் கோட்டாறு பகுதியில் உள்ளது. இந்த கல்லூரியில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பேரவை உறுப்பினர்கள்அறிமுகநிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு மாணவ மாணவியர்களிடையே பேசியதாவது:

ஆயுர்வேதம், சித்த மருத்துவம் உள்ளிட்ட இந்திய பாரம்பரிய மருத்துவ முறைகள் தற்போதைய காலகட்டத்தில் முக்கியத்துவம் பெற்று வருகிறது. இந்த மருத்துவ முறைகளால் அறுவை சிகிச்சை இல்லாமல் நோய்களைசரிசெய்ய முடியும். நோய்கள் வந்த பிறகு குணப்படுத்துவதை விட, நோய் வருவதற்கு முன்பே ஆரோக்கியமான வாழ்வியலை மேற்கொள்வது ஆயுளைநீட்டிக்க உதவும். இதற்கு ஆயுர்வேதம், யுனானி மற்றும் சித்த மருத்துவம் போன்ற இந்திய மருத்துவ முறைகள் பெரும் பங்காற்றுகின்றன.

இந்த கல்லூரியில் புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர் பேரவை உறுப்பினர்கள் தங்களின் பதவியைப் பெரும் பொறுப்பாகக் கருத வேண்டும். உறுப்பினர்கள் தங்களின் தலைமை பண்பை வளர்த்துகொள்வதோடு, மாணவர்களின் நலனை ஆசிரியர்களிடம் கொண்டு சேர்க்கும் பாலமாக செயல்பட வேண்டும். மருத்துவர்களாகிய நீங்கள் நோயாளிகளிடம் அன்பாகவும் கனிவாகவும் உரையாடும் திறனை வளர்த்துக் கொள்ள வேண்டும். இக்கல்லூரியில் பயிலும் மாணவ மாணவியர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தையும் தாண்டி பிற மாவட்டங்களை சேர்ந்த மாணவ மாணவியர்களும் ஆர்வமுடன் கல்வி கற்க வருகிறார்கள். அனைவரும் அலோபதி மருத்துவத்திற்கு இணையாக ஆயுர்வேத மருத்துவ சிகிச்சையில் சிறந்து விளங்க வேண்டுமென கேட்டுகொள்வதோடு, இப்பாரம்பரிய கல்லூரியில் பயில்வது ஒவ்வொருவருக்கும் பெருமையென உணர்ந்து சிகிச்சை முறையினை மேம்படுத்த வேண்டுமென கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு பேசினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் கோட்டார் அரசு ஆயுர்வேத கல்லூரி முதல்வர் மரு.கிளாரன்ஸ் டேவி, கல்லூரி மருத்துவர்கள், மாணவ மாணவியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டார்கள்.



### பாரூர் ஏரியிலிருந்து

# 2ம் போக பாசனத்திற்காக தண்ணீர் திறப்பு: விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி, ஜூலை 17

கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளியை அடுத்த பாரூர் பெரிய ஏரியிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு பிரதான காலவாய்களில் முதல் போக பாசனத்திற்காக தண்ணீர் திறக்கப்பட்டது.

இதன் மூலம் 2397 ஏக்கர்நிலங்கள்பயன்பெறும் வகையில் 2026ம் ஆண்டு ஜூலை 16 முதல் நவம்பர் மாதம் 22ம் தேதி வரை 130 நாட்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இதற்காக இன்று காலை பாரூர் ஏரியின் மதகை மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார், மற்றும் பர்கூர்சட்டமன்ற உறுப்பினர் கோவிந்தராஜ் (அதிமுக)கிருஷ்ணகிரி சட்டமன்ற உறுப்பினர் முகுந்தன்(தவெக)தெற்கு ஒன்றிய செயலாளர் இரவிச்சந்திரன்(தவெக)ஆகியோர் மலர் தூவி திறந்து வைத்தனர்.

அதன்படி பாரூர் பெரிய ஏரியில் இருந்து கிழக்கு மற்றும் மேற்கு பிரதான கால்வாய்களின் மூலம் முதல் 5 நாட்களுக்கு நாற்றுவிட தண்ணீர் விட்டும் பிறகு முறை பாசனம் மூலம் 3 நாட்கள் மதகை திறந்துவிட்டும், 4 நாட்கள்மதகைமூடி வைத்தும் சுழற்சி முறையில் நாள் ஒன்றுக்கு 6.00 மில்லியன் கனஅடி வீதம் 16.07.2026 முதல் 22.11.2026 வரை மொத்தம் 130 நாட்களுக்கு 2397 ஏக்கர் நிலங்கள் பாசனம் பெறும் வகையில் 361 மில்லியன் கன அடிக்கு மிகாமல் முதல் போக பாசனத்திற்கு நீர் இருப்பு மற்றும் நீர் வரத்தினை பொறுத்து தேவைக்கேற்ப தண்ணீர் திறந்துவிட ஆட்சியர் உத்திரவிட்டு,

விவசாயிகள் தண்ணீரை சிக்கனமாக பயன்படுத்தி அதிக மகசூல் பெற வேண்டுமென மாவட்ட ஆட்சியர் தினேஷ்குமார் விவசாயிகளிடம் கேட்டுக்கொண்டார் இதில் ஒன்றிய செயலாளர் கிருஷ்ணன் திருமால் பொதுப்பணித்துறை அலுவலர்கள் உள்ளிட்ட நிர்வாகிகள் கலந்து கொண்டுள்ளனர்.



பால் கொள்முதல் விலையை உயர்த்தி வழங்க கோரி

# பால் உற்பத்தியாளர்கள் தருமபுரியில் ஆர்ப்பாட்டம்

தருமபுரி ஜூலை 17

தருமபுரி பிஎஸ்என்எல் அலுவலகம் அருகே தருமபுரி மாவட்ட விவசாய சங்கத்தின் சார்பில் பால் கொள்முதல் விலை உயர்த்தி வழங்க கோரி நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட தலைவர் சக்திவேல் தலைமை தாங்கினார். ஆர்ப்பாட்டத்தில் ஆவின் பால் கொள்முதல் விலையை ஒரு லிட்டர் பசும்பாலுக்கு 50 ரூபாயும், எருமை பாலுக்கு 60 ரூபாயும் விலையை உயர்த்தி தமிழக அரசு வழங்கிட வேண்டும். ஊக்க தொகையாக லிட்டர் ஒன்றுக்கு ஐந்து ரூபாய் வழங்கிட வேண்டும். பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கங்களுக்கு மார்ஜின் தொகையான 1.25 மார்ஜின் தொகையாக 5% உயர்த்தி வழங்கிட வேண்டும். பணியாளர்களுக்கு பணி வரன்முறை செய்து ஊதிய உயர்வு வழங்கிட வேண்டும். கால்நடைகளுக்கு வழங்கப்படும் தீவனத்தை 50 சதவீத மானிய விலையில் வழங்கிட வேண்டும். கால்நடை காப்பீடு 100% மானியத்தில் வழங்கிட வேண்டும் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழக விவசாய சங்கத்தின் மாநிலத் தலைவர் சின்னசாமி பேசினார். மேற்கண்ட கோரிக்கைகளை வலியுறுத்தி தருமபுரி மாவட்ட விவசாய சங்கத்தினர் கண்டன கோசங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட துணை செயலாளர்கள் சுப்பிரமணி, சிவலிங்கம், மாவட்ட பொருளாளர் பழனி, கரும்பு பிரிவு தலைவர் லோகநாதன், மாவட்ட இளைஞரணி தலைவர் வெங்கடேசன், மாவட்ட இளைஞரணி செயலாளர் காமராஜி, கரும்பு பிரிவு செயலாளர் குமார், முன்னாள் பால்வளத் தலைவர் சில்க் சின்னசாமி மற்றும் பால் உற்பத்தியாளர்கள், விவசாய சங்கத்தினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

நாகர்கோவிலில்

# பட்டதாரி பெண் தற்கொலை

## கணவர் உட்பட 3 பேர் மீது வழக்கு



நாகர்கோவில், ஜூலை. 17

நாகர்கோவில் வடசேரி, ஆசாரி வடக்கு தெருவை சேர்ந்தவர் சிவப்பிரகாஷ் (33). திருவனந்தபுரம் டெக்னோ பார்கில் பணி புரிந்து வருகிறார். இவரது மனைவி லட்சுமி (28). பிஇ பட்டதாரி. தனியார் நிறுவனம் ஒன்றில் வேலை பார்த்து வந்தார். நேற்று முன்தினம் இரவு லட்சுமி வீட்டில் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். இது குறித்து தகவல் அறிந்ததும் வடசேரி போலீசார் விசாரணை நடத்தி, லட்சுமியின் உடலை குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்து லட்சுமியின் தந்தை முருகன் வடசேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அந்த புகாரில் மகளின் சாவில் சந்தேகம் இருப்பதாக தெரிவித்தார். புகாரில் அவர் கூறியிருப்பதாவது:

எனது மகளை கடந்த 13.12.2021 அன்று சிவப்பிரகாசுக்கு திருமணம் செய்து கொடுத்தேன். அவர்களுக்கு இரண்டே முக்கால் வயதில் ஒரு பெண் குழந்தை உள்ளது. திருமணம் செய்து கொடுத்ததில் இருந்து எனது மகளின் கணவரின் தாயார் சாந்தி என்பவர் எனது மகளை தொடர்ந்து கொடுமை செய்து வந்தார். இதற்கு லட்சுமியின் மாமனார் துரை மற்றும் கணவர் சிவ பிரகாஷ் உடந்தையாக இருந்துள்ளனர்.

ஏற்கெனவே கடந்த ஒரு வாரத்திற்கு முன்பு எனது மகள் என்னிடம் கணவரின் தாய் டார்ச்சர் செய்வதாக கூறி எனது வீட்டிற்கு வந்தார். பின்னர் சமாதானம் பேசி கணவர் வீட்டில் கொண்டு வந்து விட்டோம். இந்த நிலையில் கடந்த 14ஆம் தேதி இரவு 7.30 மணி அளவில் எனது மகள் இறந்து விட்டதாக தகவல் தெரிவித்தனர். நாங்கள் சென்று பார்த்தபோது, எனது மகள் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டதற்கு எந்த தடயமும் இல்லை. எனது மகளின் உடலை என மருமகன் மடியில் வைத்து அழுது கொண்டிருந்தார். இதனால் எங்களுக்கு மகள் சாவில் பல சந்தேகம் எழுந்துள்ளது. உரிய விசாரணை நடத்தி எனது மகள் சாவுக்கு காரணமானவர்கள் மீது வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என புகாரில் கூறப்பட்டுள்ளது. புகாரின் பேரில் வடசேரி போலீசார் தற்கொலைக்கு தூண்டியதாக மாமியார் சாந்தி, மாமனார் துரை, கணவர் சிவப்பிரகாஷ் ஆகிய 3 பேர் மீதும் வழக்கு பதிவு செய்துள்ளனர்.








தருமபுரி மாவட்ட புதிய ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குடும்ப நலத்துறையின் சார்பில் உலக மக்கள் தொகை தினம் 2026 உறுதி மொழியை மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமையில் ஏற்றுக்கொண்டனர். இதைத்தொடர்ந்து விழிப்புணர்வு பேரணியை கொடியசைத்து துவக்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, துணை இயக்குனர் குடும்ப நலம் பாரதி, துணை இயக்குனர் (காசநோய்) மருத்துவர் பாலசுப்பிரமணியம், துணை இயக்குனர் (தொழுநோய்) விஜயலட்சுமி, புள்ளி விவர உதவியாளர் அம்பிகா ,மாவட்ட விரிவாக்க கல்வியாளர் அய்யந்துரை உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மதுரை மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005 தொடர்பாக அனைத்து துறை அலுவலர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி மாநில தகவல் ஆணையாளர்கள் வி.பி.ஆர்.இளம்பரிதி, மு.நடேசன், அ. விஜயராம் ஆகியோர் தலைமையில் நடைபெற்றது.

# திருப்பூர் மாவட்டம் பல்வேறு பகுதிகளில் "உங்களை தேடி உங்கள் ஊரில்" திட்டத்தின் கீழ் கலெக்டர் ஆய்வு



திருப்பூர் ஜூலை:17

அரசின் அனைத்து நலத்திட்டங்கள் சேவைகள் தங்குதடையின்றி மக்களுக்கு விரைந்து சென்றடைவதை உறுதி செய்திடும் உன்னத நோக்கத்துடன் உங்களை தேடி உங்கள் ஊரில் என்ற திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட பகுதிகளில் நேற்று முதல் இன்று காலை 9.00 மணி வரை பல்வேறு அரசுதுறைகளின் மூலம் செயல்படுத்தி வரும் திட்டங்கள் மற்றும் சேவைகள் ஆகியவற்றின் செயல்பாடுகள் குறித்து கள ஆய்வு மேற்கொண்டார்கள்.

உங்களை தேடி உங்கள் ஊரில் திட்டத்தின் கீழ் நேற்றைய தினம், மாவட்ட ஆட்சித்தலைவர் மனிஷ் நாரணவரே தாராபுரம் வட்டத்திற்குட்பட்ட நந்தவனப்பாளையம் ஊராட்சி ஆத்திக்காடு கிராமத்தில் வீட்டு மனைப்பட்டா வழங்குவது தொடர்பாகவும், வெறுவேடம் பாளையத்தில் உள்ள கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டியினையும் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டும், தும்பலப்பட்டி ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, சின்னக்காளியம்மன் கோவில் வீதி, அம்பேத்கர் நகர், தாராபுரம் நகராட்சி சிறுவர் பூங்கா, காமராஜபுரம் பள்ளி மாணவர்கள் சமூக நீதி விடுதியில் அடிப்படை வசதிகளான குடிநீர், கழிப்பறை வசதிகள் உள்ளிட்டவைகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்கள்.

அதனைத் தொடர்ந்து, இன்றைய தினம், நஞ்சியம்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் பால் கொள்முதல் குறித்தும், நஞ்சியம்பாளையம் ஊராட்சியில் வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணி, நஞ்சியம்பாளையம் ஆவின் தொகுப்புப்பால் குளிரகம் மற்றும் நஞ்சியம்பாளையத்தில் நடைபெற்று வரும் கால்நடை சிறப்பு மருத்துவ முகாமை பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள்.

# தென்காசியில் காங்கிரஸ் கட்சியின் சார்பில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்தநாள் விழா



தென்காசி, ஜூலை.17

தென்காசி மாவட்டம் தென்காசி புதிய பேருந்து நிலையம் முன்பு பெருந்தலைவர் கர்மவீரர் காமராஜர் 124 வது பிறந்த நாளை முன்னிட்டு தென்காசி மாவட்ட காங்கிரஸ் தலைவர் செல்வராஜ் தலைமையில் தென்காசி நகர காங்கிரஸ் கட்சியினர் கர்மவீரர் காமராஜர் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தினர் பின்னர் ஊழல் மற்றும் லஞ்சத்துக்கு எதிரான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தும் வகையில் காங்கிரஸ் கட்சியினர் கரும் பலகையில் கைரேகை பதிவு செய்து விழிப்புணர்வை ஏற்படுத்தினர். நிகழ்ச்சியில் திருநெல்வேலி பாராளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ், தென்காசி மாவட்ட பஞ்சாயத்து துணைத்தலைவர் உதய கிருஷ்ணன், தென்காசி மாவட்ட காங்கிரஸ் பொதுச் செயலாளர் சந்தோஷ் , தென்காசி மாவட்ட மகளிர் காங்கிரஸ் தலைவி பூமாதேவி, தென்காசி நகர காங்கிரஸ் தலைவர் மாடசாமி ஜோதிடர், துணைத் தலைவர் சித்திக், நகர பொருளாளர் ஈஸ்வரன், ஜேம்ஸ், ஆறுமுகம், வழக்கறிஞர் சிவா, நகர்மன்ற உறுப்பினர் சுப்பிரமணியன் மற்றும் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்




களியக்காவிளை நாஞ்சில் கத்தோலிக்க கலை, அறிவியல் கல்லூரியில்

# சமூகப் பணித்துறை முதலாம் ஆண்டு மாணவர்களின் அறிமுக நிகழ்வு

தென்தாமரைகுளம்., ஜூலை., 17

களியக்காவிளை நாஞ்சில் கத்தோலிக்க கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் சமூகப் பணித்துறையின் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான அறிமுக நிகழ்வானது 13.07.2026 மற்றும் 15.07.2026 ஆகிய தேதிகளில் சிறப்பாக நடைபெற்றது.

இந்நிகழ்வில் கல்லூரியின் தாளாளர் முனைவர் அருட்பணி ஸ்டீபன் மற்றும் கல்லூரி முதல்வர் முனைவர் அமலநாதன் கலந்துகொண்டு மாணவர்களுக்கு வாழ்த்துரை வழங்கினர்.

முதல் நாள் நிகழ்வில் டாக் அண்ட் க்யூர் உளவியல் ஆற்றுப்படுத்துதல் நிறுவனத்தின் நிறுவனர் ஸ்ரீஜா ஜி. சிறப்பு விருந்தினராகப் பங்கேற்று, சமூகப்பணியின் முக்கியத்துவம், தொழில்முறை திறன்கள் மற்றும் மனநலத்தின் அவசியம் குறித்து உரையாற்றினார். இரண்டாம் நாள் நிகழ்வில் சமூகப்பணி கல்வியாளரும் ஆய்வாளருமான அல் அமீன் ஜெ. சிறப்பு உரையாற்றி, சமூகப்பணித் துறையில் உள்ள தொழில் வாய்ப்புகள், தொழில் முறை நடைமுறைகள் குறித்து மாணவர்களுக்கு விளக்கமளி த்தார்.

இந்நிகழ்வு சமூகப் பணித்துறையினரால் சிறப்பாக ஒருங்கிணைக்கப்பட்டு நடத்தப்பட்டது. இதில் சமூகப் பணித் துறை மாணவ, மாணவியர்கள் ஆர்வமுடன் கலந்துகொண்டு பயனடைந்தனர்.



# பெருந்தலைவர் காமராஜர் 124 வது பிறந்தநாள் விழா மலர் தூவி மரியாதை செலுத்திய த.வெ.க.நிர்வாகிகள்

அறிவொளிநகர் ஜூலை, 17

தமிழ்நாடு முதல்வர் சி.ஜோசப்விஜய் அவர்களின் ஆணைக்கிணங்க ஊரக வளர்ச்சி மற்றும் நீர்வளத்துறை அமைச்சர் N.ஆனந்த் அவர்களின் வழிகாட்டுதலின் படி திருப்பூர் மேற்கு மாவட்ட கழக செயலாளர் செயல்வீரர் G.K. சங்கர் அவர்களின் அலோசனை படி பல்லடம் சட்ட மன்ற உறுப்பினர் K. ராம்குமார் அவர்களின் ~ன்னிலையில் பல்லடம் சட்ட மன்ற தொகுதி வடகிழக்கு ஒன்றிய சார்பாக அப்பகுதி நிர்வாகிகள் அலு வலகத்தில் பெருந்தலைவர் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது.

அவ்விழாவில் அப்பகுதி செயலாளர் A.அபூபக்கர் சித்திக், மற்றும் இனைச் செயலாளர் R. பிரபு (எ) கார்த்திக், துனைச் செயலாளர் J அஷ்ரப், பொருளாளர் M. விஜயகுமார், ஒன்றிய செயற்குழு R. ஜாஹிரா பானு, ஒன்றிய செயற்குழு A. ரம்யா, ஒன்றிய மகளிர் அணி செயலாளர் S.லாயிலா, ஒன்றிய மகளிர் அணி பொருளாளர் R.ரேஷ்மா, ஒன்றிய மகளிர் அணி இனைச் செயலாளர் S.அன்னலட்சுமி ஒன்றிய கலை மற்றும் கலாச்சார அணி செயலாளர் ய.ரபுதீன், ஒன்றிய செயற்குழு வெங்கடேஷ் மற்றும் திருப்பூர் மேற்கு மாவட்ட செயற்குழு உறுப்பினர் C. ரமேஷ், அப்பகுதியில் பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்..

# தொண்டியில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் சிறப்பு முகாம்

## கலெக்டர் மனுக்களைப் பெற்று உடனடி நடவடிக்கை எடுக்க உத்தரவிட்டார்



ராமநாதபுரம், ஜுலை 17

ராமநாதபுரம் மாவட்டம் தொண்டியில் உங்களைத் தேடி உங்கள் ஊரில் என்னும் சிறப்பு திட்டத்தின் கீழ் மாவட்ட ஆட்சியர் மா.சிவகுரு பிரப்கரன் மனுக்களை பெற்று உடனடி நடவடிக்கை எடுக்கும் நிகழ்வு நடைபெற்றது. தொண்டியில் தமிழ்நாடு முஸ்லிம் மகளிர் பேரவை நிர்வாகிகள் கவுன்சிலர் சமீமா பானு தலைமையில் ஆலிமா செய்யது சுல்தான் ஆலிமா முத்து நாச்சியா ஜுனைதா பானு ஜென்னத்துல் பிர்தவுஸ் ஆகியோர் மனு அளித்தனர் தொண்டி பெண்கள் மேல்நிலை பள்ளி 1967ல் தொடங்கப்பட்ட பள்ளியில் மாணவிகள் அதிக எண்ணிக்கையில் தொடர்ந்து படித்துக் கொண்டிருக்கின்றார்கள் மாவட்ட அளவில் சிறந்த மதிப்பெண் பெற்ற மாணவிகள் பயிலும் இப்பள்ளியில் போதிய வகுப்பறை கட்டிடங்கள் இல்லை சுற்றுச் சுவர் மிகவும் தாழ்வாக இருக்கின்றன அதனால் சிறுவர்கள் மதில் மேல் ஏறி பள்ளிக்குள் விளையாடக்கூடிய நிலை ஏற்படுகிறது. பெண் பிள்ளைகள் பாதுகாப்பு கருதி சுற்றுச்சுவர் உயர்த்தி கொடுக்க வேண்டும், இப்பள்ளியில் படிக்கும் மாணவிகள் தங்கும் விடுதிகளில் அதிக எண்ணிக்கையில் மாணவிகள் தங்க வசதி ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும், போதிய ஆசிரியர்கள் உடனடியாக நியமனம் செய்ய வேண்டும், வாட்ச்மேன் ஒருவர் பணி அமர்த்த வேண்டும் மேலும் தொண்டி பத்தாவது வார்டில் மீராசாகிப் தெருவில் போர்க்கால அடிப்படையில் மின் கம்பம் உடன் போடவேண்டும் மின் வயர்கள் தாழ்வாக இருக்கின்றதை சரி செய்து கொடுக்க வேண்டும் மேலும் தொண்டியில் அண்ணா நகர் பகுதியில் மின்வயர்கள் தாழ்வாக தொங்குகிறது குடிநீர் சரிவர வருவதில்லை என்று மாவட்ட ஆட்சியரிடம் தமிழ்நாடு முஸ்லிம் மகளிர் பேரவை பெண்கள் மனு அளித்த உடன் உடனடியாக மாவட்ட ஆட்சித் தலைவர் நடவடிக்கை எடுக்க உத்தர விட்டார்.

# நாகர்கோவில் சிறையில் அடித்துக் கொல்லப்பட்ட வாலிபரின் உடலை வாங்க 4வது நாளாக மறுப்பு

## உறவினரிடம் தனிப்படை போலீசார் விசாரணை



நாகர்கோவில், ஜூலை. 17

கன்னியாகுமரியை அடுத்த சாமிதோப்பு, ஈத்தங்காடு பகுதியை சேர்ந்தவர் சபரிவர்மன் (33). மாற்று திறனாளியான அவரது கடையில் குட்கா மற்றும் புகையிலை பொருட்கள் விற்றதாக போலீசாரால் கைது செய்யப்பட்டார். கடந்த 13 ஆம் தேதி சிறையில் சபரிவர்மன் மயங்கி கிடந்ததாக அவரை குமரி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை கொண்டு சென்றனர். அங்கு பரிசோதனை செய்த டாக்டர்கள் சபரிவர்மன் ஏற்கனவே இறந்து விட்டதாக தெரிவித்தனர். சபரிவர்மனை போலீசார் அடித்து கொலை செய்ததாக உறவினர்கள் குற்ற சாட்டினர். மேலும் உடலை வாங்க மறுத்து அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்த நிலையில் போலீஸ் மாவட்ட எஸ்பி ஸ்டாலின் நேரில் விசாரித்தார். நாகர்கோவில் நீதிபதி சத்தியமூர்த்தி விசாரணை நடத்தினார். விசாரணையில் சபரிவர்மன் சிறைக்குள் வைத்து கொடூரமான முறையில் அடித்துக் கொலை செய்யப்பட்ட தகவல் தெரிந்தது.

நீதிபதி முன்னிலையில் நடைபெற்ற பிரேத பரிசோதனையில் சபரிவர்மனின் உடலில் 19 இடங்களில் காயங்கள் இருந்தது கண்டறியப்பட்டது. இது குறித்து வழக்கு பதிவு செய்து நாகர்கோவில் ஜெயில் வார்டன்கள் ஜெகன், சுரேஷ், சிவகுமார் ஆகிய 3 பேரை முதலில் கைது செய்தனர்.

தொடர் விசாரணையில் சபரிவர்மனை சிறை கைதிகள் 8 தாக்கியதும் தெரிய வந்தது. கைது செய்யப்பட்ட வார்டன்கள் 3 பேரும் கோர்ட்டில் ஆஜர் படுத்தப்பட்டு நாங்குநேரி கிளை சிறையில் அடைக்கப்பட்டனர். சிறை கைதிகள் 8 பேரும் ஏற்கனவே நாகர்கோவில் ஜெயிலில் அடைக்கப்பட்டிருக்கும் நிலையில் அவர்களை வேறு சிறைக்கு மாற்ற நடவடிக்கை எடுக்கபட்டு வருகிறது.

இந்த நிலையில் இறந்த சபரிவர்மன் குடும்பத்தினருக்கு அரசு நிவாரணம் வழங்க வேண்டும் என கேட்டு பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். மாவட்ட கலெக்டர் பிரதாப், போலீஸ் எஸ் பி ஸ்டாரின் ஆகியோர் சபரிவர்மன் வீட்டில் சென்று கோரிக்கைகளை அரசுக்கு தெரிவிப்பதாக ஆறுதல் கூறினர். இருப்பினும் அரசு நிர்வாகம் அறிவிக்கும் வரை சபரிவர்மன் உடலை பெற்றுக் கொள்ள மாட்டோம் என்று குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் தெரிவித்துள்ளனர்.

நேற்று 4ம் நாளாக மீண்டும் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் சபரி வருமானின் உடல் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை பிணவறையில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இந்த கொலை வழக்கு தொடர்பான விசாரணையை தீவிர படுத்த ஏ டி எஸ் பி கலையரசன் தனிமையில் தனி படை அமைக்கப்பட்டு விசாரணை விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# வலம்புரிவிளை குப்பை கிடங்கில் தீ பிடித்த 2 நாளில் அணைப்பு: மக்கள் நிம்மதி

நாகர்கோவில், ஜூலை. 17

நாகர்கோவில் வலம்புரிவிளை குப்பை கிடங்கில் 14ஆம் தேதி அதிகாலை 2 மணிக்கு தீ விபத்து ஏற்பட்டது. தீயணைக்கும் பணியில் மாவட்ட தீயணைப்பு அதிகாரி சத்தியகுமார் தலைமையில் உதவி மாவட்ட அதிகாரி துரை மேற்பார்வையில் 60 தீணைக்கும் வீரர்கள் முதல் நாளில் பணியில் ஈடுபட்டனர். மாநகராட்சி நிர்வாகம் சார்பில் பொக்லைன் இயந்திரங்கள் கொண்டுவரப்பட்டு குப்பைகள் கிளறி விடப்பட்டது. மேலும் தண்ணீரும் தேவைக்கு ஏற்ப வழங்கப்பட்டது. ஒரு கட்டத்தில் காற்றின் வேகம் அதிகரித்ததால் தீயின் வேகம் அதிகரித்தது. இதனால் தண்ணீர் தேவை அதிகரித்தது.

தொடர்ந்து நேற்று முன்தினம் 2வது நாளாக கூடுதலாக தீயணைப்பு வீரர்கள் வாழவைக்கப்பட்டனர். மொத்தம் 100 தீயணைப்பு வீரர்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து தீயணைக்கும் பணியில் ஈடுபட்டனர்.

ஒரு கட்டத்தில் பாதாள சாக்கடை மூலம் வரும் கழுவு நீர்சுத்திகரிப்பு பகுதியில் இருந்து தண்ணீர் பம்பிங் செய்து தீயணைக்கும் பணியில் வீரர்கள் ஈடுபட்டனர். நேற்று முன்தினம் மாலை தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டு, இரவு 8 மணிக்கு தீயை முற்றிலும் அணைத்தனர்.

இந்த நிலையில் நேற்று காலை குப்பை கிடங்கில் சில இடங்களில் இருந்து புகைகள் வெளியேறியது. உடனே மாநகராட்சி ஊழியர்கள் அந்த பகுதியில் தண்ணீர் பீச்சியடிக்கும் பணியில் ஈடுபட்டனர். அவர்களுடன் சில தீயணைப்பு வீரர்களும் புகைவரும் இடங்களில் தண்ணீர் அடிக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். வலம்புரி விளை கிடங்கில் தீப்பிடித்ததால் சுமார் 5 முதல் 7 நாட்கள் வரை போராடி தீயணைக்கப்பட்டு வந்தது. தற்போது தீப்பிடித்த 2 நாட்களில் அணைத்ததால் குப்பை கிடங்கை சுற்றி உள்ள மக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.

# இந்திய கடல்சார் பல்கலைக்கழக புத்தாக்க தொழில்முனைவு ஆராய்ச்சி மையம் தொடக்கம்




சென்னை, ஜூலை 17

இந்திய கடல்சார் பல்கலைக்கழக புத்தாக்க தொழில் முனைவு ஆராய்ச்சி மையத்தை சென்னை செம்மஞ்சேரியில் உள்ள தலைமையகத்தில் அதன் துணைவேந்தர் டாக்டர் மாலினி வி. சங்கர் குத்துவிளக்கேற்றி தொடங்கி வைத்தார்.

புதிதாக தொடங்கப்பட்டுள்ள இந்த கடல்சார் புத்தாக்க மையம் மாணவர்கள், கடல்சார் துறை ஆராய்ச்சியாளர்கள் மற்றும் வளரும் தொழில்முனைவோர் மத்தியில் கடல்சார் கண்டுபிடிப்பு, தொழில் முனைவு மற்றும் நிறுவனமேம்பாட்டை வளர்ப்பதற்கான ஒரு பிரத்யேக தளமாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

புத்தாக்க தொழில் நிறுவனங்களுக்கு ஆதரவளிப்பதும், தொழில்துறை சவால்களுக்கு புதுமையான தீர்வுகளை ஊக்குவிப்பதும், மாலுமிகள், துறைமுக வல்லுநர்கள், தொழில்துறை பங்குதாரர்கள், கல்வி நிறுவனங்கள் மற்றும் ஆராய்ச்சி அமைப்புகளுக்கிடையே ஒத்துழைப்பை மேம்படுத்துவது இதன் நோக்கமாகும்.

மேலும் துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் நீர்வழிகள் அமைச்சகத்தால் நடத்தப்பட்ட ஹேக்கத்தான் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட ஐந்து புத்தாக்க தொழில் நிறுவனங்களிடம் புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் இணைத் துணைவேந்தர் டாக்டர் ஸ்ரீராஜூ பாலாஜி வழங்கினார். துணைவேந்தர் புத்தொழில் நிறுவனங்களுக்கு ஆரம்ப நிதியுதவியாக ரூ. 60 லட்சத்துக்கான காசோலைகளை வழங்கினார். இந்தத் திட்டத்தின் ஒட்டுமொத்த மதிப்பு சுமார் ரூ. 5 கோடி ஆகும்.

தொடக்க விழாவில் மெரிடைம் இந்தியா பவுண்டேஷன் நிர்வாக இயக்குனர் விஸ்வநாதன், இந்திய கடல்சார் பல்கலைக்கழக இணைத் துணைவேந்தர் டாக்டர் ஸ்ரீ ராஜூ பாலாஜி, பல்கலைக்கழக புத்தாக்க தொழில்முனைவு ஆராய்ச்சி மைய இயக்குனர் டாக்டர் ஒய்.வி.வி.எஸ்.என்.மூர்த்தி, மற்றும் ஐஐடி மெட்ராஸ் பேராசிரியர் டாக்டர் முரளி ஆகியோருடன் கல்வித்துறை மற்றும் கடல்சார் துறையைச் சேர்ந்த முக்கியப் பிரமுகர்களும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

தொடக்கவிழாவில் உரையாற்றிய இந்திய கடல்சார் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் டாக்டர் மாலினி வி. சங்கர் கூறியதாவது :

இப்பல்கலைக்கழகபுத்தாக்கதொழில் முனைவு ஆராய்ச்சி மையம்அமைப்பது போன்ற முயற்சிகள், உலகளாவிய கடல்சார் தலைமையாக உருவெடுக்கும் இந்தியாவின் தொலைநோக்கு இலக்குகளுக்கு பெரும் பங்காற்றும் அதே வேளையில், கடல்சார் தொழில்துறைக்கான தீர்வுகளை உருவாக்க இளம் கண்டுபிடிப்பாளர்களுக்கு அதிகாரமளிக்கும் என்றார். மேலும் மத்தியதுறைமுகங்கள், கப்பல்போக்குவரத்துமற்றும்நீர்வழிகள் அமைச்சகத்தால் தூண்டப்பட்டு, ஐஐடி மெட்ராஸ், ஐஐடி பாம்பே மற்றும் சென்னை துறைமுகம் உள்ளிட்ட முக்கிய பங்குதாரர்களின் ஆதரவுடன் ஓராண்டு காலமாக மேற்கொள்ளப்பட்ட முயற்சியின் பயனாக இந்தப் புதிய கடல்சார் புத்தாக்க தொழில் முனைவு ஆராய்ச்சி மையம் அமைந்துள்ளது என்று துணைவேந்தர் தெரிவித்தார்.




### குமரியில் இருந்து கேரளாவுக்கு

# மீன் வலைக்குள் மறைத்து மானிய மண்ணெண்ணெய் கடத்தல்; 2 பேர் கைது

நாகர்கோவில், ஜூலை. 17

குமரி மாவட்டம் வழியாக கேரள மாநிலத்திற்கு ரேஷன் அரிசி, மானிய விலை மண்ணெண்ணெய் உள்ளிட்ட பல பொருட்கள் கடத்தப்பட்டு வருவது தொடர்ந்து நடந்து வருகிறது. இதனை தடுக்க மாவட்ட நிர்வாகம் சார்பில் பறக்கும் படைகள் அமைக்கப்பட்டுள்ளன. பறக்கும்படை அதிகாரிகள் தற்போது 24 மணி நேரமும் கண்காணிப்பு பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த நிலையில் நேற்று முன்தினம் இரவு இரவு சுமார் 10.45 மணியளவில் மாவட்ட பறக்கும் படை தனி வட்டாட்சியர் கெ எம் பாரதி தலைமையில், ஓட்டுனர் ஜாண் பிரைட் பறக்கும் படை குழுவினர்கள் மற்றும் நித்திரவிளை காவல் உதவியாளர் ராஜா ராபர்ட் உதவியுடன் கிள்ளியூர் வட்டார பகுதியில் கடத்தல் தடுப்பு ரோந்து பணியில் இருந்தனர். அப்போது விரிவிளை என்ற இடத்தில் சந்தேகத்திற்கு இடமாக வந்த வாகனத்தை சோதனை செய்ததில் அதில் பழைய மீன் வலையின் அடியில் 30 பிளாஸ்டிக் கேன்களில் சுமார் 1050 லிட்டர் மீனவர்களுக்கு மானியவிலையில் அரசால் வழங்கப்படும் வெள்ளை நிற மண்ணெண்ணெய் கேரளா மாநிலத்திர்க்கு கடத்தி செல்ல இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. கடத்தலில் ஈடுபட்ட குறும்பனையை சேர்ந்த சுதன் ராஜ் (38) மற்றும் குறும்பனையை சேர்ந்த ஷிபு (41) ஆகிய 2 நபர்களையும் மாவட்ட குடிமை பொருள் குற்றவியல் காவல் ஆய்வாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. மண்ணெண்ணெய் தூத்தூர் சின்னதுறை அரசு கிட்டங்கியில் ஒப்படைக்கப்பட்டது.

### கன்னியாகுமரியில்

# மனநலம் பாதித்த பெண்ணிடம் பாலியல்; குற்றவாளிக்கு குண்டாஸ்



கன்னியாகுமரி, ஜூலை. 16

நாகர்கோவில் என்ஜிஓ காலனி கீழவண்ணான்விளை பகுதியைச் சேர்ந்த சதாசிவம் என்பவரின் மகன் குமார் (49). இவர்மனநலம்பாதிக்கப்பட்ட பெண்ணிடம் பாலியல் துன்புறுத்தலில்ஈடுபட்டதாகக் கிடைத்த புகாரின் அடிப்படையில், கன்னியாகுமரி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப்பதிவு செய்யப்பட்டது. இதையடுத்து வழக்கின் தீவிரத்தையும், பொதுமக்கள் மற்றும் பெண்களின் பாதுகாப்பு நலனையும் கருத்தில் கொண்டு, குற்றவாளி மீது குண்டர் சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஸ்டாலின் பரிந்துரையின் பேரில், கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் பிரதாப் குற்றவாளி குமாரை குண்டர் தடுப்புச் சட்டத்தின்கீழ் சிறையில் அடைக்கஉத்தரவு பிறப்பித்தார். அதன்படி, தற்போது சிறையில் உள்ள குற்றவாளி மீது குண்டர் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

குமரி மாவட்டத்தில் சட்டம் மற்றும் ஒழுங்கு தொடர்பான குற்றங்கள், பாலியல் குற்றங்கள், மற்றும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களில் ஈடுபட்டவர்கள் தொடர்ந்து குண்டர் சட்டத்தில் அடைக்கப்பட்டு வருகின்றனர்.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, பாலியல் குற்றங்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான சட்ட நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்படும் என்று காவல் கண்காணிப்பாளர் எச்சரித்துள்ளார்.

# தேசிய முக்குலத்தோர் கழகத் தலைவர் அதிமுக மு.அமைச்சர் பொள்ளாச்சி ஜெயராமனை மரியாதை நிமித்தமாக சந்தித்தார்




திருப்பூர் ஜூலை 17

அதிமுக கோவை புறநகர் தெற்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் பொள்ளாச்சி ஜெயராமன் அவர்களை தேசிய முக்குலத்தோர் கழகம்

நிறுவனத் தலைவர் டெல்டா டி. சுரேஷ் தென்னம்பரியர் அவர்கள் பொள்ளாச்சியில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்உடன்மாநிலஒருங்கிணைப்பாளர் .சின்னசாமி மாநில அமைப்பு செயலாளர் .விஜய கண்ணன் மாநில செயலாளர் தனசேகர் மாநில வியாபாரிகள் சங்க செயலாளர் பொள்ளாச்சி அபிராம் பிரசாத் இளைஞரணி மாநில பொதுசெயலாளர் . ஜனா மாநில தொழிற்சங்க செயலாளர் ராஜாங்கம் அவர்கள் கலந்து கொண்டனர்.

# தஞ்சாவூர் பெரிய கோவில் 102 கண்காணிப்பு கேமராக்கள்

## முரசொலி எம்பி தொடங்கி வைத்தார்



தஞ்சாவூர் ஜூலை 17

தஞ்சாவூர் பெரிய கோவிலில் ரூபாய் 40 லட்சத்தில் பொருத்தப் பட்ட 102 கண்காணிப்பு கேமராக் களின்செயல்பாட்டை மக்களவை உறுப்பினர்முரசொலி தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் பெரிய கோவிலில் 6 ஆண்டுகளுக்கு முன் செயல்படுத் தப்பட்ட கண்காணிப்பு கேமராக்கள் பழுதடைந்து செயல் இழந்தன இதனால் புதிய கேமராக்கள் பொருத்த பக்தர்கள் வலியுறுத் தினர்

இதன்படி ரூபாய் 40 லட்சத்தில் கோவிலின் நுழைவு வாயில் முதல் உள்பிரகாரம் முழுவதும், அனைத்து முக்கிய சன்னதிகள், திருசுற்று மண்டபங்கள் உள்ளிட்ட பகுதிக ளில் 102 கேமராக்கள் பொருத்தப் பட்டன

இவற்றில்2 கேமராக்கள் 360 டிகிரி கோணத்தில் சுழன்று கண் காணிக்கும் திறன் கொண்டவை இவற்றின் செயல்பாட்டை தஞ்சாவூர் தொகுதி மக்களவை உறுப்பினர் முரசொலி தொடங்கி வைத்து, தெரிவித்ததாவது:

இக்கோயில் பக்தர்களின் கோரிக்கையின்படி தொல்லியல் துறை அலுவலர்களிடம் வலியுறுத் தப்பட்டதன் விளைவாக இந்த 102 கண்காணிப்பு கேமராக்கள் பொருத் தப்பட்டுள்ளன

இதற்கான ஒப்பந்த புள்ளி விரைவில் கோரப்படவுள்ளது ,என்றார். முரசொலி நிகழ்ச்சியில் தொல்லியல் துறை திருச்சி மண்டல கண்காணிப்பாளர் அறவாழி, உதவி கண்காணிப்பு பொறியாளர்கள் உமேஷ், சரவணன், பெரிய கோயில் முதுநிலை பராமரிப்பு உதவியாளர் சோபிதா, முதுநிலை தோட்டக் கலை உதவியாளர் பாலசிங்கம் உள்ளிட்டோர் கலந்துகொள்ளனர்

### தமிழக வெற்றி கழகம் சார்பில்

# பெருகோப்பனப்பள்ளி ஊராட்சியில் காமராஜர் பிறந்த நாளை முன்னிட்டு நலத்திட்ட உதவிகள்



கிருஷ்ணகிரி, ஜூலை. 17

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டம் பர்கூர் மத்திய ஒன்றியம் பெருகோப்பனப்பள்ளி ஊராட்சியில் தமிழக வெற்றி கழகம் சார்பில் பெருகோப்பனப்பள்ளி கிராமத்தில் காமராசர் 124வது பிறந்த நாளை முன்னிட்டு காமராஜர் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி கொண்டாடினர். நிகழ்ச்சியில் கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளர் முரளிதரன் தலைமை தாங்கி தவெக கட்சி அலுவலகம் வளாகத்தில் கட்சி கொடியை ஏற்றி வைத்து தூய்மை பணியாளர்களுக்கு உபகரணங்கள், பள்ளி மாணவ மாணவிகளுக்கு பள்ளி உபகரணங்கள், மகளிருக்கு புடவைகள் ஆகிய நலத்திட்ட உதவிகளை வழங்கி சிறப்புரையாற்றினார். நிகழ்ச்சியில் பர்கூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் பசவராஜ், பர்கூர் மத்திய ஒன்றிய செயலாளர் சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர். பெருகோப்பனப்பள்ளி ஊராட்சி சேர்ந்த மத்திய ஒன்றிய இளைஞரணி நிர்வாகி மனோஜ் குமார், ஒன்றிய துணைச் செயலாளர் அஜித்குமார், கிளைச் செயலாளர் சுரேஷ், கிளை இணைச் செயலாளர் சதீஷ் ஆகியோர் இதற்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர். மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சத்யராஜ், தகவல் தொழில்நுட்ப அணி சேலம் மண்டல இணை ஒருங்கிணைப்பாளர் ஜெயசூர்யா, பர்கூர் மேற்கு ஒன்றிய செயலாளர் புஷ்பராஜ், பர்கூர் நகர செயலாளர் பிரித்திவிராஜ், அசோகன் மற்றும் மத்திய ஒன்றிய இணைச் செயலாளர் ஹேமானந்தன், மத்திய ஒன்றிய துணைச் செயலாளர் பத்மா, கோவிந்தசாமி, மாவட்ட நிர்வாகிகள்,ஒன்றிய நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




# மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் ஆடிமுளைக்கொட்டு திருவிழா

மதுரை, ஜூலை 17

மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர் திருக்கோவிலில் ஆடி முளைக்கொட்டு திருவிழா கொடியேற்றத்துடன் ஆரம்பமானது.

கொடியேற்றத்தின் அன்று இரவு மதுரை மீனாட்சி அம்மன்சிம்மவாகனத்திலும் ஆடி வீதியில் திருவீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள் பாலித்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16 C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.